# The Journal of
# THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

EDITED BY
S. GOPALAN, B. A., B. L.,
*Honorary Secretary,*
*T. M. S. S. M. Library, Tanjore.*

**Vol. XVI** **No. 3**

PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

A. C. 1962. Śaka 1884.

**Annual Subscription Rs. 4.**

The following back numbers of the Journal of The Tanjore Sarasvati Mahal Library, are available for sale :—

| | | | | |
|---|---|---|---|---|
| Vol. | VIII. | Parts I, II & III. | Price Rs. | 2/- |
| ,, | IX. | ,, | ... | 2/- |
| ,, | X. | ,, | ... | 4/- |
| ,, | XI. | ,, | ... | 4/- |
| ,, | XII. | ,, | ... | 4/- |
| ,, | XIII. | ,, | ... | 4/- |
| ,, | XIV. | ,, | ... | 4/- |
| ,, | XV. | ,, | ... | 4/- |

*(Postage Extra)*

As only a very few copies are available, book your orders early.

*Copies can be had of :—*

**The Honorary Secretary,**

T. M. S. S. M. Library, Tanjore.

(Madras State)

# The Journal of
# THE TANJORE SARASVATI MAHAL LIBRARY


EDITED BY

S. GOPALAN, B. A., B. L.,

*Honorary Secretary,*

*T. M. S. S. M. Library, Tanjore.*



Vol. XVI No. 3

PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

A. C. 1962. Śaka 1884.

**Annual Subscription Rs. 4.**

# CONTENTS


| No. | | Pages. |
|---|---|---|
| 1. | Editorial | |
| 2. | மோடிப் பலகணி—2. கப்பல் செய்தி<br>—வித்துவான் திரு. வீ. சொக்கலிங்கம். | 1—16 |
| 3. | मीमांसाशास्त्रगुच्छः—पूर्वमीमांसाधिकरणसंक्षेपः<br>— Sri N. S. Devanāthāchāriar. | 9—16 |
| 4. | निघण्टुसमुच्चयः — Sri P. V. Varadarāja Śarma, M. A. | 53—60 |
| 5. | मुद्राराक्षस नाटक (सार) प्रतापसिंह राजा विरचित<br>— Sri S Gaṇapathi Rao. | 29—36 |
| 6. | பச்சிலையும் பசும்பொன்னும்<br>—Sri N. V. Venkatasubramanya Sāstri. | 1—16 |
| 7. | वैयाकरणसिद्धान्तकौमुदी-भट्टोजीदीक्षितकृता<br>An Analysis in English by late Sri P. V. Nāganātha Sāstri<br>(continued from Vol. XVI. No. 2.)<br>—Sri N. S. Dēvanāthāchāriar | 207—214 |
| 8. | आपस्तम्बस्मार्तप्रयोगः<br>—Sri S. Sundarēśa Śāstri and Sri V. Sundara Śarma | 49—56 |
| 9. | தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி (முன்னுரை<br>முதலியவைகளுடன்)<br>—வித்துவான் திரு. வீ. சொக்கலிங்கம். | 4+8=12 |
| 10. | Minor works of Sri Vēṅkaṭāchāriar<br>4. रघुनन्दनबिरुदावलिः (continued) 5. वैशाखोत्सववर्णनप्रारम्भः<br>—Sri N. S. Dēvanāthāchāriar | 33—40 |
| 11. | தன்வந்தரி வைத்யம் (இரண்டாம் பாகம்)<br>—Dr. S. Veṅkaṭarājan,. L. I M. | 225—232 |
| 12. | नवग्रहचरितं नाम नाटकम्-घनश्यामकविविरचितम्<br>—Sri S Jagadiśan, M. A., and Sri V. Sundara Śarma | 25—28 |
| 13. | மதிப்புரை—பக்திதாரை<br>—Sri N. S. Devanāthāchāriar | 1—2 |
| 14. | Our Exchanges. | 1—2 |

# THE JOURNAL OF
# THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

Vol. XVI A. C. 1962 Śaka 1884 No. 3


## EDITORIAL

The Second instalment of a series of articles entitled 'Modi Palakani', appears in this issue of the Journal of Saraswathi Mahal. Under the caption "கப்பல் செய்தி", this article tells us how the two vessels called Brhadeeswar and Prasad were hired by one James Rose from the Maratha Rajas of Tanjore and were on waters carrying merchandise from island to island. Saluvanayakan Pattinam, later known as Sarafoji Raja Pattinam was the yard where these ships were shored. This was a port during the time of the Nayakas also.

It was here that Sarafoji built the famous tower called 'Manora', to commemorate the victory of the British over Napolean.

Another article of interest in this issue is "பச்சிலையும் பசும் பொன்னும்", "Greens and Gold", describing the process of transformation of base metals into gold.

The serials published in previous issues are continued. Vellaippillaiyar Kuravanchi and Navagrahacharitam are completed in this issue.

**S. GOPALAN,**
*Editor*

# கப்பல் செய்தி.

வித்துவான் **வி. சொக்கலிங்கம்**, தமிழாசிரியர்.
சரசுவதி மகால், தஞ்சாவூர்.

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்பது யாவரும் அறிந்த ஒரு பழமொழி. திரவியங்களைத் திரைகடலோடித் தேடுதற்கு மரக்கலங்கள் இன்றியமையாதன. சோணாட்டார் காவிரிப்பூம் பட்டணம் இருந்து, மரக்கலங்களின் துணைகொண்டு, கடல்கடந்து சென்று பொருளீட்டி வந்தனர் என்பது பழைய இலக்கியங்களால் அறியக்கிடக்கின்றது. தஞ்சை மராத்தியர்கள் காலத்தும் நாகையிலிருந்து கப்பல்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருக்கின்றன. அவைகளை ஆங்கிலேயர் வந்து பார்வையிட்டிருக்கின்றனர். அவைகளைப் பத்தா கூலிக்கும் பெற்றிருக்கின்றனர். இவைகள் பற்றிய செய்திகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### ஆவணம் எண் ௧

லண்டன் முத்திரை. ஸ்ரீ வையாபுரி மேஸ்திரியார் அவர்களுக்கு மேஸ்த்தர் ஜேம்ஸ் ரேஸ் துரையவர்கள் சலாம்.

இப்பவு நாமும் அப்பாவு பிள்ளையும் சரவேந்திர பட்ட......................௸ பட்டணத்து காரிஸதர் மரிவாதி செயிது நமக்காக வேண்டிய சன்மானங்கள் சேகரஞ் செயிது கொடுத்து, கப்பல் முதலான சாமான்களை காண்பித்து சாக்கிரதை செயிதார். ௸ கப்பல் ரொம்ப பிலாமானது, லெக்ஷண முள்ளதுமாயிருக்கிறது மல்லாமல் அதில் யதிகமாய் ரிப்பேர் செய்யவேண்டியதில்லை. சில விடங்களில் செம்பு புத்தான் போயிருக்கிறது. அதுலுமல்லாமல் கலம்மத்து பண்ணி தார் பூசிக்கொள்ளுகிறதுக்கு உத்தேசம் ரூ. ௱-ம், கோளி வெட்டி கடலில் தள்ளுகிறதுக்கு ரூ. ௱-ம் ஆ யெறனூரு ரூபாயி சிலவு செய்தால் கப்பல் தீவாந்திரங்களுக்குப் போகலாம். யானால் கப்பலைப் பார்ததின் பேரில் நமக்கு சந்தோஷமாயிருக்கிறது. ௸ கப்பலுக்கு கப்பிதான் முதலானவர்களுடைய சிலவுகளை அரண்மனையாரவர்கள் குடுத்துக்கொண்டால் வருஷம் 1க்கு ரூ. அதூ கொடுக்குறோம். அல்லது ௸ சிலவுகள் நாமே செய்துகொண்டால் வருஷம் 1க்கு ரூ. ௲ கொடுத்து வருகிறோம். ஆகையால் நமக்கு ஸ்ரீ ஸ்ரீ ஐயினீசு மகாரர்சா சாயெபு யவர்களைக் காணவேணுமென்கிற மனதுமாயிருப்பதால் அந்தப் படிக்கி பேட்டி செய்து வைப்பிரென்கிறதாக நினைக்கிறோம். நம்முடைய கப்பல் யிருவது நேரத்தில் நர்கப்பட்டணத்துக்கு வந்துசேரும். யிந்தக் காரியத்தில் நீ ரெடுத்துக்கொண்ட பிரயாசத்துக்காக ரொம்ப நன்றியறிந்தவருக இருக்கிறோம். ஸ்ரீ ஸ்ரீ அயினீசு மகாரர்ஜா சாயெபு

யவர்களுக்கு நம்முடைய பேரால் ரொம்பவும் சலாஞ் சொல்லவும். மைத்த காரியங்களெல்லாம் அப்பாவு பிள்ளை யிடத்தில் சொல்லியிருக்கிறோம். அவர் முகதாவில்ப் பேச சகல காறியமும் தெரியலாம். ஆகையால் நாம் யவடத்துக்கு சீக்கிறத்தில் வ......ண்டு கொள்ளும்படி...........செய்யவேண்டியது. வேணும் சலாம்.

௲அ௱௩௰அ-இ

ஜெனவரி-மீ உ௰ரு௳ (Sd) James Rop.

(ஆவணத்தின் பின்புறமுள்ள முகவரி)

இவை தஞ்சாவூரில் வையாபுரி மேஸ்திரியாறவர்களுக்கு கொடுப்பது.

இலண்டன் இலச்சினை பொறிக்கப்பட்ட இக்கடிதம் மிகமெல்லிய தாளில் எழுதப்பட்டிருக்கிறது. கடுக்காய் மையினல் எழுதப்பட்டிருப்பதால் அந்த மை பட்ட இடம் பெரிதும் (மடித்துப்போய்) இற்றுப்போயிருக்கிறது. பிழைகள் மலிந்துள்ளன. நடை மிகவும் கொச்சையாக உள்ளது. சிற்சிலவிடங்களில் சொற்கள் தெளிவில்லை.

மேற்கூறப்பட்ட ஆவணத்தினல் ஆங்கிலேயர்கள் சரபேந்திரராச பட்டணம் வந்திருக்கிருர்கள். அவர்களுக்குத் தஞ்சை அரசினர் சன்மானம் கொடுத்துச் சிறப்புச்செய்திருக்கின்றனர். அது போழ்து அங்குள்ள கப்பலைப் பார்த்துவிட்டு அதனை வாடகைக்குப் பெற விரும்புகின்றனர். அதற்காக அவர்கள் நாகை வந்து சேருவதாகக் குறிப்பிடுகின்றனர். தஞ்சை மன்னரைக் காண விரும்புகின்றனர். இவை போன்ற செய்திகள் அறியக்கிடைக்கின்றன. இவ்வாவணத்தின் காலம் 1838 ஜனவரி 25. ஆகவே, அப்போது தஞ்சையை ஆண்ட மன்னர் சத்ரபதி சிவாஜி மகாராசா சாகேப் (1832—1855) ஆவர். 25—1—1838ல் ஜேம்ஸ் ரோப் துரை கையொப்பமிட்டிருக்கிருர். அப்பாவு பிள்ளை என்பவர் தஞ்சை அரசாங்கத்தில் ஒரு மதிப்புள்ள பதவியில் இருந்திருக்க வேண்டும். அவர் மூலமாகக் கப்பல் பத்தா ஆங்கிலேயருக்கும் தஞ்சை மன்னருக்குமிடையில் நடைபெறுகின்றது. கப்பித்தான் என்ற சொல் ஆங்கிலத்தில் Captain என்ற கப்பல் தலைவனைக்குறிக்கும்.

கப்பல் புறப்படும்போது கோழியினைப்பலியிட்டுக் கப்பலைப் புறப்படச் செய்வது வழக்கம்போலும். ஆங்கிலேயர்களுக்குக்கூட கப்பலின் அழகில் அதிக கவனம் இருந்திருக்கிறது. அதனல்தான் "கப்பல் ரொம்ப பிலாமானது; லெக்ஷணமுள்ளதுமாயிருக்கிறது" என்று கூறியிருக்கிருர். திரு. வையாபுரி அவர்கள் சத்ரபதி சிவாஜி மகாராஜா சாகேப் அவர்கள் காலத்தில் மேஸ்த்திரியாக இருந்திருக்கின்ருர் போலும்,

இதனோடு தொடர்புடைய இதற்கடுத்த ஆவணம் இக்கடிதத்தின் செய்திகளை அடிப்படையாகக்கொண்டு "பதினாறு ரூபாய்" என்ற இலச்சினையும் "பொக்கிஷம்" என்ற இலச்சினையும், முன்பக்கத்தின் மேல் இருமூலைகளிலும் பொறிக்கப்பட்டு "கப்பல் பத்தா கூலி உடன்படிக்கை" என்ற பெயரோடு காணப்படுகின்றது. இலச்சினைகள் ஒவ்வொன்றும் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், உருது ஆகிய நான்கு மொழிகளின் சொற்களோடு காணப்படுகின்றன.

## ஆ. எ. எ

சிந்தாயாத்திரை ௲௮௱௩௰௮-ம் (1838)-ஷு சூலைய்-மீ ௨௬ (26)உக்கி விளம்பி-ஷு ஆடி-மீ ௰௩ (13)உ தஞ்ச நகரம் கோட்டைக்குள் இருக்கும் சரபேந்திரராசப்பட்டணம் மத்தியஸ்தம் கனகசபையாபிள்ளையவர்களுக்கு நாகப்பட்டணத்தில் யிருக்கும் மேஸ்த்தர் சேமிஸ்சு ருஸ்சு துரை யெழுதிக்குடுத்த கப்பல் பத்தா கூலி ஓடம்படிக்கை யென்னவென்றால்,

தங்களதாகிய பிறகதீசுபர் பரிசாத்து யென்ங்கிரயிரண்டு பாயிமற கப்பலை நான் பத்தாகூலியாக ஒப்புக்கொண்ட விபரமாவது ஷ கப்பல் ௪௰௬ (46) கரிசு யேத்துமதி செய்யப்பட உருவும், அதின் ஓடும்போற தளவாட சாமானும் வருஷம் 1க்கு நான் பத்தா கூலி தீத்துக்கொண்டது ரூ. ௬௲ (6000)க்கு ஷ கப்பல் பழுது பார்க்கறதர்க்காக வருஷம் 1க்கு ரூ ௪௱ (400) தள்ளி மைத்த ரூ ரு௲௬௱ (5600)க்கு நான் ஒப்புக்கொண்டு ஷ கப்பலை சாலமோன்று அயிலன் (சாலமோன் தீவு) யென்கிற தீவுக்கும் மைத்தும் தீவு தீவாந்திர முதலான துறைமுகங்களுக்கும் பாயி விரித்து ஓடிதிரிந்து சிந்தாயாத்திரையாயிந்த கரையாகிய சென்னபட்டணம் நாகூர், நாகப்பட்டணம் யிந்த துறைமுகங்கள் ஓடிவந்தபின் அந்தந்த வருஷம் ஆனி-மீ த்திக்கி சூன்-மீ ௰௭ (17)உயில் மேலெழுதிய பத்தாகூலி துகையை நான் செலுத்தி வருகிறது. யிந்த பிறகாறம் ஏழு வருஷத்துக்கு ஷ கப்பலை நான் பத்தா கூலியாக தங்களிடத்தில் ஒப்புக்கொண்டிருப்பதால் அந்தந்த வருஷத்தில் மேலெழுதியபடி பத்தாகூலி துகையை செலுத்தி வருகிறது. ஷ கப்பலுக்கு ௲௨௱ (1200) ரூபாயிக்கி மேல் அதிய பழுதுகள் பழுதுபாத்து சிலவு செய்தால் அந்தந்தயிடத்தில் யிருக்கப்பட்ட வற்த்தகாள் கையெழுத்தாவது உத்தியோகஸ்த்தாள் கையெழுத்தாவது கணக்கில் வய்த்து, அதில் என் கையெழுத்தும் வய்த்து நான் குடுக்கற கணக்கு பிறகாறம் தங்கள் பத்தாகூலியில் யெனக்கு தள்ளி குடுக்கறது. ஷ கப்பலுக்கு உரு பாசு சென்னபட்டண கெவுறண்மேண்டாறிடத்தில் பெத்து வருகுற பாசை நான் உருவில் வய்த்துக்கொண்டு அதர்க்கு நகல் தங்களுக்கு நான் குடுக்கறது. ஷ பாசு சிலவு நானே யேற்த்துக்கொள்ளுகுறது. ஷ கப்பலில் வருகுற சாமானில் தங்களுக்கு தேவையாயிருந்தால் அதுகள் தங்களுக்கு குடுத்து அதின் கிரயம் பத்தாகூலியில் தள்ளிக்கொண்டு அதியம் பிறிதி நான் தங்களிடத்தில் பெத்துக்கொள்ளுகுறது. ஷ கப்பலை நான் பத்தா கூலிக்கி

ஒப்புக்கொண்டு யென்பிறமாயி ஓடிதிரியரதில் ருசிகம், தெய்வீகம் நேரிட்டால் அது தங்கள் பிறமேயல்லாமல் யெனக்கு சம்மந்தம்யில்லே. மேலெழுதிய கெடு யேழு வருஷம் சென்ற உடனே ஓடும் போற தளவாட சாமானுடனே உ ரூ ஒப்பிப்பே னுகவும். இந்தப்படிக்கி சம்மதிச்சு கனகசபையாபிள்ளையவர்களுக்கு மேஸ்த்தர் சேமிஸ்சு ருஸ்சு துறை கப்பல் பத்தாகூலி ஒடம்படிக்கை யெழுதிகொடுத்தேன்.

(ஒப்பம்) James Rop.

யிதற்காறியும் சாஷ்இ

நாகபட்டனத்தில் யிருக்கும் ஆடாத்து செயிலாமு சாயபு மரைக்கார் அறிவேன்.

நாகபட்டனத்திலிருக்கும் முத்தையஞ் செட்டியார் அறிவேன்

நாகப்பட்டணம் நாராயண பிள்ளை அறிவேன்

திருவேங்கிடம் நெட்டெழுத்து

(இவ்வாவணத்தின் பின்பக்கம்)

நிம்பர் க

சூஅாஙஅ (1838) ஸூ சுலாயீ-மீ உசு (26 உ நாகப்பட்டணம் அகூற் கச்சேரியில் நாகப்பட்டணத்திலிருக்கும் மெஸ்த்தற் ஜெமிசு ருசு துரையவர்கள் தஞ்சனகறம் கொட்டைக்குள்ளிருக்கும் சறவேந்திற ருசபட்டணம் மத்திஸ்தம் கனகசபையாபிள்ளை யவற்களுடைய பிரதிசுபற பிரசாதென்ங்கிற கப்பலே வருஷம் 1க்கு ரூ ருசூசுா (5600) வீதம் பத்தாக்கூலிக்கி யெழுவருஷத்துக்கு ஒப்புக் கொண்டதற்காக ஒடம்படிக்கை யெழுதிக்குடுக்க வேண்டியதுக்காக ஷெ மெஸ்த்தற் செமிசு ருஜ துறையவற்கள் காரியம் .............. வெங்கிட்டருவு வசம் விற்க்கப்பட்டது.

ஒப்பம் குலாம் தஸ்த்தகீர்

தா.........ஷாம்பு.

சத்திரபதி சிவாஜி மகாராஜா சாகேப் (1832-1855) அவர்கள் காலத்தில் ஏற்பட்டிருக்கிறது இந்த உடன்படிக்கை. 1838-ம் ஆண்டு சனவரி மாதம் எழுதிய கடிதத்தில், கப்பித்தான் முதலானவர்களுடைய சிலவுகளை அரண்மனை யார் கொடுத்துக்கொண்டால், கப்பல் பத்தாக் கூலி ஆண்டு 1க்கு ரூ. 18000 பதினெண்ணுயிரம் கொடுப்பதாயும், இல்லையேல் ரூ. 6000 ஆருயிரம் கொடுப்ப தாயும் எழுதியிருந்த ஆங்கிலேய ஜேம்ஸ் ரேரப் துரையவர்களுக்கு, அரண் மனையாரவர்கள் ரூ. 6000 ஆருயிரம் பெற்றுக்கொள்ளச் சம்மதித்து எழுதி விட்டனர் போலும். ஆகவேதான், இந்தப் பத்திரத்தில் ரூ. 6000 ஆருயிரத்துக்குப்

பத்தா கூலி உடன்படிக்கைச் சீட்டெழுதிக் கொடுத்திருக்கிறார். மூன் கடிதம் தஞ்சாவூரிலிருக்கும், திரு. வையாபுரி மேஸ்திரி அவர்களுக்கு எழுதிவிட்டு, ஜேம்ஸ் துரையவர்கள் இந்த உடன்படிக்கைச்சீட்டை, சரபேந்திர ராச பட்டணம் மத்தியஸ்த்தம் திரு. கனகசபையா பிள்ளை அவர்களுக்கு எழுதிக்கொடுத்திருக்கிறார்.

பிழைகள் மலிந்து காணப்படுகின்ற இந்த உடன்படிக்கைச்சீட்டில் 'சிந்தா யாத்திரை' என்ற சொல் இரண்டிடங்களில் காணப்படுகின்றது. இச்சொல்லுக்குப் பொருள் "நலத்தோடு சென்று, நன்மையோடு திரும்பி வருதல்'' என்பது போலும். Captain (கேப்டன்) என்று ஆங்கிலத்தில் அழைக்கின்ற கப்பல் தலைவனை, அதே உச்சரிப்பால் தமிழில் 'கப்பித்தான்' என்று எழுதியிருக் கின்றனர். கையொப்பம் ஆங்கிலத்தில் James Rop (ஜேம்ஸ் ரோப்) என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மேலே பெயர் குறிப்பிடும்போது ஜேம்ஸ் ரோஸ் என்று எழுதப்பட்டிருக்கிறது.

முதற்கப்பலின் பெயர் 'பிரகதீசுவரர்' என்பது. பெரிய புராணத்தில் கூறப்படுகின்ற அப்பூதியடிகள் புராணத்தில், திருநாவுக்கரசர்மீதுள்ள அளவு கடந்த அன்பினால் அப்பூதியடிகள் தம் பிள்ளைகளுக்கெல்லாம் மூத்த திருநாவுக்கரசு, இரண்டாம் திருநாவுக்கரசு என்று இப்படியாகப் பெயர் வைத்ததுமட்டுமல்லாமல் அவர் வீட்டிலுள்ள படி, மரக்கால், நிறைகோல், பசு, எருமை முதலியவைகளுக்கெல்லாம்கூட, திருநாவுக்கரசு படி, நாவுக்கரசர் மரக்கால் என்று இப்படியாகப் பெயரிட்டதாகச் சேக்கிழார் கூறுவதுபோலத் தஞ்சை மன்னர் சிவாஜி அவர்கள் இராசராசேச்சுரத்தில் எழுந்தருளியுள்ள பிரகதீச்சுரர்மீது வைத்த அளவிலா அன்பினால் தன்னுடைய கப்பலுக்கும் பிரகதீச்சுரர் என்று பெயரிட்டழைத்திருக்கிறார்போலும்.

இரண்டாவது கப்பலின் பெயர் 'பிரசாத்' என்பது. பிரசாத என்ற சொல்லுக்குத் 'திருவருள்' என்று பொருள். இறைவனுடைய அருள் அல்லது இறைவனது திருவருள் எனப் பொருள்படக்கூடிய அளவுக்கு ஒரு பாய்மரக் கப்பலுக்குப் பெயரிட்டிருக்கிறார், தஞ்சை மன்னர். பொதுவாக இவ்விரு கப்பல்களின் பெயர்களை நோக்குங்கால் இந்தச் சிவாஜி மன்னருக்கு இறைவன் பால் எத்துணை அன்பு இருந்திருக்கிறது என்பது புலனாகின்றது. இம்மன்னர் களுக்குக் குலதெய்வம் "சந்திரமௌலீசர்". (சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் – 2). ஆகவே இவர்கள் சிவபக்தியில் சிறந்தவர்கள்.

கப்பலைப் பத்தா கூலிக்குப் பெறுபவர்கள், தாங்கள் " பாயி மரக் கப்பலை எடுத்துக்கொண்டு சாலமோன் ஐலண்டு முதலான தீவு தீவாந்தரங் களுக்குச் செல்வோம்." என்று குறிப்பிடுகின்றனர். சாலமோன் தீவுகள் ஆஸ் திரேலியாவுக்கு அருகில் உள்ளன. அவைகள் இங்கிருந்து ஏறத் தாழ 7000

மைல்களுக்கு அப்பால் உள்ளன. இக் கப்பல்கள் 7000 மைல்கள் சென்று, மறுபடியும் 7000 மைல்கள் பாய் விரித்து வந்து, நாகையை அடைகின்றன. ஆகவே, அவைகள் ஏறக் குறைய 14000 மைல்களுக்குமேல் செல்லக்கூடிய வலிவும், வனப்பும் பெற்றிருந்தன போலும். மேலும் "சாலமோன் முதலான தீவுகள்" என்றதினால் இன்னும் அதிக தொலைவிலுள்ள தீவுகளுக்கும் சென்று வந்தன என்று கொள்ளவும் இடமிருக்கின்றது.

பாய்மரக்கப்பல் 46 கரிசு ஏற்றுமதி செய்யக்கூடியது" எனத் தெரிகின்றது. கரசை கரிசி, கரிசை, கரிசு இவை ஒரே அளவினைக் குறிக்கும் சொற்கள். கரசை என்பது 200 பறை அல்லது 400 மரக்கால் கொண்டதாகும். 400 மரக்காலுக்கும், 16 மூட்டைகள் எனல் பொருந்தும். (ஏனெனில் சிற்சில இடங்களில் அளவைகள் மாறுபாடுடையன). ஆகவே, கரிசு 1க்கு 16 மூட்டைகள் எனில், 46 கரிசுக்கு 736 மூட்டைகள் ஆகும். நெடுந்தூரம் வெறுங் கப்பலாகக் கூடச் செல்லவில்லை. சுமார் 736 மூட்டைகளைச் சுமந்துகொண்டு ஆயிரக்கணக்கான மைல்கள் சென்று வரும் ஆற்றல் உடையன இக்கப்பல்கள். அப்படி 46 கரிசு ஏற்றுமதி செய்வதற்கு வாங்கப் பெறும் அனுமதிச் சீட்டு (License)க்கு "உரு" அல்லது "உருபாசு" என்று அக்காலத்தில் வழங்கப் பட்டு வந்தது போலும். இந்த 'உரு' வினை "சென்னப் பட்டண கெவுறண் மேண்டாரிடத்தில் பெற்று வருகிற பாசை நான் உருவில் வைத்துக் கொண்டு" என்று கூறியிருப்பதால், சென்னை ஆங்கிலேய அரசாங்கத்தாரிடமிருந்து தான் பெற வேண்டியிருந்திருக்கிறது. கப்பலைப் பழுது பார்த்த சிலவுத் தொகையைப் பற்றிய செய்தி மிகவும் நேர்மையாக இருக்கிறது என்றே கருத முடிகின்றது. மேலும், கப்பலில் வருகின்ற சாமான்கள் தஞ்சை அரசாங்கத்திற்குத் தேவையாயிருந்தால், அவைகளைத் தஞ்சை அரசாங்கத் திடமே கொடுத்துப் பத்தா கூலியில் தள்ளிக் கொள்வது, கொடுப்பது என்பனவும், தஞ்சை அரசினருக்குக் கொடுக்கும் முதற் சலுகை எனக் கருதலாம். மேலும் எதிர்பாராது ஏற்படும் கப்பல் விபத்துக்களினால் ஆகும் இழப்புக்கள், கப்பலுக்கு உரியவர்களையே சார்தல் வழக்கம் போலும்.

சாட்சிக் கையொப்பமிட்டவர்கள் மூவரும் நாகப்பட்டணத்தைச் சேர்ந்தவர்கள். இந்த ஆவணம் எழுதியவரும் நாகைபோலும். இவ்வாவணத்தின் பின்பக்கத்தின் தோற்றம் ஆவணக்களரியில் பதிவுசெய்யப்பட்டதுபோலக் காணப்படுகின்றது. ஆனால் உண்மையில் ஆவணக்களரியில் பதிவுசெய்யப்படவில்லை. அதற்கான இலச்சினையும் இல்லை. ஜேம்ஸ் ரோஸ் துரையவர்கள் காரியம் வெங்கிட்டருவ் அவர்கள் வசம் விற்கப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

'பத்தாகூலி' என்கிற சொல்லுக்குப் 'படிச்சிலவுக்கூலி' எனப் பொருள் கூறுகின்றனர். (भत्ता = படிச்சிலவு) (ஆங்கிலத்தில் Batta = படி; விடுதிச்சிலவு)

**ஆவணம் எண் அ.**

ஈ ஈ துரையவர்கள் சமூகத்துக்கு சேதுபாவா சத்திரம் பங்களா நேமண்க்கு சேவுகன் கோவிந்தப்ப நாயக்கன் மிகுந்த வணக்கத்துடனே சலாம்செய்து யெழுதிக்கொண்டது. யென்னமென்றால்

யெனக்கு சமூகத்தில் வுத்திரவு குடுத்தபிரகாரம் நான் வுத்திரவு பெத்துக் கொண்டு திருச்சிதம்பலத்தில் வறவேண்டிய பணத்துக்காக சாளவ (நாய்)க்கன் பட்டணம் வுமறசாவிடத்தில் காயிதம்ங் கொண்டுவந்து குடுத்து வுமறசாயபும், ராமசாமி, நான் யிந்த மூணுபேருமாயி பாப்பானிடத்தில் காயிதம் குடுத்து பணம் கேட்டதற்கு ஷெ பாப்பான் சொல்லுகிரது குடுத்துயிருக்கப்பட்ட (தா)னியங்களுக்கு தானிய விவரங்கண்டு யின்ன யின்ன விலையென்று விபறமாய் கணக்கும், கோளி யாடு பிணம் ரூ. ௯௰ யிதுவெல்லாங்கண்டு விபறமாய் கணக்கு வந்தால், தன் கணக்கும் ஒத்துப்பார்த்துக்கொண்டு, பாக்கி பணம் கையில் குடுத்துவிடுகுறேனென்று சொல்லுகிறான். ஆகையால் அவனை பணம் கேழ்க்கப் படவில்லை. அதற்காக ஆவடை வசமாயி விபறமாயி கணக்கு வந்தால் கண்டித்து வாங்கிப்போடுகிறேன்.

கார்பாரியிடத்தில் நானும் வுமற்சாயபு ரெண்டுபேரும் போய் கப்பல் தண்ணி கொண்டுபோயிசிற்குதே யென்று கேட்ட காரியத்துக்கு நீ கப்பலண்டை வரக்கூடாது என்று சொல்லுகுறார்.

அரண்மனையில் போகப்பட்ட சாமானுக்கு நீ பாத்தியப்படுகுறேமென்று சொன்னால் நீ அந்த யிடத்துக்குப் போகலாமென்று சொல்லுகிறார். கொல்லு பட்டரை போட்டிருந்த கொட்டகை விளுந்துபோயிருப்பதினாலே அந்த கொட்டகையைப் பிரித்துக் கட்டுகுறேமென்று சொன்னயிடத்தில் நீ கட்ட வேண்டியதில்லை, நான் ஆளுவிட்டுக் கட்டிக்கொள்ளுகிரேனென்று சொல்லு குறார். கப்பலும் தண்ணிகொண்டு போயிருக்குது. அந்தத் தண்ணியை யிரைக் குறேமெண்டு சொன்னதற்கு நீ யெறைக்கக்கூடாதென்றும் வுமற்சாயபுக்கு வுத்தரவு பண்ணியிருக்குறார். யிதையல்லாமல் கப்பல் சாமான் நார்காலி—க. மேசை—க. ஒத்தை பூட்டு—க. யிந்த சாமானை தோட்டக்காரர் பரிமணம் வசம் குடுத்துவிடச்சொல்லி சுப்பிரமணிய பிள்ளை காயிதம் யெழுதியிருக்கிறார். நான் துரையவர்களுடைய வுத்திரவு வந்தால் குடுப்பேனென்று பறிமணத்துக்கு சொல்லியிருக்குறென்—சமுகத்தில் வுத்திரவானபடி நான் ஒருவருக்கு குடுக்க வில்லை. யிப்பவும் சமுகத்தில் வுத்திரவு யெப்படி வருகுதொ அப்படி நடந்து கொள்ளுகுறென்—யிப்பவும் வுத்திரவுப்படி ஆவடை வசமாயி காயிதம் யெழுதி யனுப்பிவைத்திருக்குறென். யெப்படி வுத்திரவு வருகுதொ அப்படி நடந்து கொள்ளுகிறென். யிப்பவுமெனக்கும் ஆவடைக்கும் சாப்பாட்டுக்கில்லாத்தினாலே

ரெண்டு மாஸத்தை சம்பளம் ஆவண்டவசமா யனுப்பிவிக்கும்படியாயி சமூகத்தில் வுத்திரவாகவேண்டியது. வேணும்—சலாம்.

௲௮௱௩௰௬-௵ நவம்பற்-மீ ௧௨ } (ஒப்பம்) —— இந்த கிரல் பங்களா நேமணக்கு கோவிந்தப்ப நாயக்கன்.

(True Copy)

James Rop (இது உண்மையான கையெழுத்து)

'சேது பாவா சத்திரம்' என்பது தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக் கோட்டை வட்டம், அதி வீரராம பாண்டியன் பட்டணம் ஆகிய அதிராம்பட்டினத்திலிருந்து சுமார் எட்டுக் கல் தொலைவில் வங்காளக்குடாக் கடலோரமாக இருக்கிறது. இங்குள்ள பங்களாவில் நேமணுக சேவகம் பார்க்கின்றவர் கோவிந்தப்ப நாயக்கன் போலும். 'நேமணுக' என்கின்ற மராத்தியச் சொல்லுக்கு 'வழிகாட்டி' அல்லது 'உடன் செல்ல நியமிக்கப்பட்டவர்' என்று பொருள். இந்த அலுவல் பார்க்கின்றவருக்கு (துரையவர்களுக்கு வரவேண்டிய) நிலுவையை வசூல் செய்ய அதிகாரம் உண்டு போலும். அதன்படி திருச்சிற்றம்பலத்தில் உள்ள ஒரு அந்தணரிடம் சென்று நிலுவையினைக் கேட்ட செய்தியினைக் குறித்துக் கடிதம் எழுதும்போது, சாளுவ நாயக்கன்பட்டணம் உமர்சாவைக் குறிப்பிடுகின்றார்.

சாளுவ நாயக்கன் பட்டினம், மேற்சொன்ன சேதுபாவா சத்திரத்திலிருந்து வட கிழக்கே சுமார் இரண்டு கல் தொலைவில் உள்ளது. நாயக்க மன்னர்கள் காலத்தில் "சாளுவ நாயக்" என்ற ஒரு அரசப் பிரதிநிதி (கவர்னர் ஜெனரல்) இருந்தார். அவர் பெயரால் ஒரு சிறு கிராமம் துறைமுகமாகப் பயன்படுத்தப் பட்டு வந்தது. நாளடைவில் அது ஒளி இழந்தது. பின்னர் வந்த மராத்திய மன்னர்கள் காலத்தில் புத்துயிர் பெற்றது. மன்னர் சரபோஜியின் ஊக்கத்தினால் சரபேந்திரராச பட்டணம் என்ற பெயரோடு ஒரு பெரிய துறைமுகமாக விளங்கியது. அது காலை கப்பல் கட்டும் தொழில்களும் நடைபெற்றன. கப்பல் கட்டுவதற்குத் தேவையான, மரங்கள், கயிறுகள் முதலியன இவ்வூருக்கு அருகிலேயே கிடைத்தன. கப்பல் கட்டும் தொழிற்சாலைகளில் கரும்பொன் கொண்டு நங்கூரங்கள் பெரும் அளவிலும் செய்யப்பட்டன. கப்பலுக்குத் தேவையான இதர இரும்புச் சாமான்களும் செய்யப்பட்டன. இத்துறை முகத்தில் அக்காலத்தே ஏற்றுமதி இறக்குமதி சாமான்கள் மிகப் பல. மிகப் பெரிய நகரமாக விளங்கிய இந்நகரத்தில் ஒரு பெரிய நூலகமும் இருந்தது. அதில் கப்பல் கட்டுவதற்கு வேண்டிய செய்திகள் அடங்கிய நூல்கள் இருந்தனவாம்.

'சாளுவ நாயக்கன் பட்டணம்' என்னும் 'சரபேந்திரராச பட்டணம்' இன்னும் எல்லோருடைய மனதையும் கவரக்கூடிய ஒரு பெருஞ் சிறப்பினைப் பெற்றிருக்கின்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து கண்டு வியந்து (திரும்பிச்செல்ல மனமில்லாது) திகைப்பர். அதுவே மன்னர் சரபோஜியால் கட்டப்பட்ட 'மனோரா' வாகும்.

ஆங்கிலேயரோடு பகைமைகொண்ட பிரெஞ்சுக்காரர்கள் தஞ்சை, பிரதாபசிம்ம மன்னர் காலந்தொட்டு, மராத்தியர்கள் ஆங்கிலேயர்களோடு நட்புக்கொண்டிருந்த காரணத்தால், மராத்திய அரசின்மீதும் பகைமை பூண்டிருந்தனர். ஆங்கிலேயர்கள் தஞ்சை மராத்திய மன்னர்களிடம் அன்புள்ள வர்களாக இருந்தனர். பிரெஞ்சுக்காரர்களின் வெற்றிக்கும் புகழுக்கும் காரண மாக இருந்த நெப்போலியன், இந்தியாவின்மீது படையெடுத்தபோது மன்னர் சரபோஜி மிகவும் வருந்தினர். 1814-ம் ஆண்டு ஆங்கிலேயருக்கும், நெப்போலிய னுக்கும் 'வாட்டர்லூ' என்ற இடத்தில் நடந்த போரில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர். அதுகேட்டு மகிழ்ச்சியுற்ற மன்னர் சரபோஜி, ஆங்கிலேயரின் வெற்றியைத் தன் வெற்றியாகக் கருதி, உலகோர் வியக்கும் வண்ணம் கட்டியதே இம்மனோராவாகும். 'மனோரா' என்ற மராத்தியச் சொல்லுக்கு 'வெற்றியின் சிகரம்' அல்லது 'வெற்றிக்கோபுரம்' என்று பொருள். 'மனரா என்ற அரபுச் சொல்லிலிருந்து வந்ததாகக் கூறுவர். இம்மனோராவே இத்துறைமுகத்திற்குப் பலகாலும் கலங்கரை விளக்கமாகப் பயன்பட்டு வந்திருக்கிறது. மனோராபற்றிய இன்னும் விரிவானசெய்திகளை 1956-ம் ஆண்டு, கும்பகோண மகாமக மலரில், தஞ்சை, மூத்த இளவரசர் ஸ்ரீமந்த் ராஜஸ்ரீ இராஜாராம் ராஜா சாஹேப் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையினின்றும் அறியலாம்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த இச்சாளுவநாயக்கன் பட்டணத்திற்குத் தஞ்சையினின்றும் சென்ற கோவிந்தப்ப நாயக்கர் குறிப்பிட்ட உமர்சாயபு, சாளுவநாயக்கன் பட்டணத்தில் முக்கியமானவர்போலும். அவரையும், அவருடன் இருக்கும் இராமசாமி என்பவரையும் அழைத்துக்கொண்டு, திருச்சிற்றம்பலத்தில் உள்ள அந்தணரிடம் சென்று நிலுவை கேட்டதாகக் குறிப்பிடுகின்ற செய்தி கூறப்பட்டிருக்கின்றது.

இக் கடிதத்தில் இதன் பிறகு தான் கப்பல் செய்தி தொடங்குகின்றது. ஒரு உண்மையான ஊழியக்காரன், தன் தலைவனிடமுள்ள பற்றுதலினால், தன் தலைவனுடைய பொருள்கள் சேதமடைவதைக் கண்டு மனம் பதைப்பான். இக் கடிதம் எழுதியிருக்கின்ற கோவிந்தப்ப நாயக்கர், தான் ஓர் உண்மை ஊழியன் என்பதை விளக்கி விட்டார். கப்பல் தண்ணீர் கொண்டுபோயிருப்பது குறித்தும் கொல்லுப்பட்டரை கொட்டகை விழுந்தது குறித்தும் கவலுறுகின்றார். இது மற்றிக் கப்பல் கார்பாரிக்கும் இவருக்கும் சச்சரவு ஏற்பட்டிருக்கிறது. மேலும்

இவர் தன்னிடம் ஒப்படைத்த சாமான்களையும் தன் தலைவரான *[James Rop]* துரையவர்களின் அனுமதியின்றி மற்றவரிடம் தர மறுக்கிறார்.

இக் கடிதம் *11—11—1839*ல் எழுதப்பட்டிருக்கிறது. அது காலை தஞ்சையைச் சத்திரபதி சிவாஜி மகாராஜா சாகேப் அவர்கள் ஆண்டு வந்திருக்கிறார்கள். இதில் *(James Rop)* துரையவர்களுடைய உண்மையான கையொப்பமும் இருக்கின்றது.

ஆவணம் எண் ௯.

௨

Negapatam, 2nd Sept. *1841.*

Sir,

போன மீ ௨௯௨ போடப்பட்ட தங்களுடைய கடுதாசியை வரப் பத்திக் கொண்டோம். அதில் தாங்கள் எழுதிய அவையடக்கங்களினால் நமது இங்கிலீசு கடிதங்கள் தங்களுக்குச் சரியான பாகமாகவில்லையென்று அறிந்து மிகுந்த விசனப்பட்டு நாங் தமிழ் அறியாதிருந்தும் யெப்படியாகிலும் நமது நியாயங்கள் தங்களுக்கு நன்றாய்த் தெரியும்படியாய், இந்தக் கடுதாசியை தமிழில் தானே தங்களுக்கு யெழுதுகிற வருத்தத்தை எடுத்துக் கொண்டோம்.

நாம் பத்தா கூலிக்கு ஸ்ரீ அரண்மனையாரிடத்தில் ஒப்புக் கொண்ட கப்பலுக்கு பழுது பார்த்த சிலவு, அரண்மனையார் திரும்பக் கொடுக்கிறதற்கு நமக்குண்டாயிருக்கிற நியாயங்களை, அவ்விடத்து மனிதர்களுடைய கேழ்விக்கு செவி கொடுக்காமல் நியாயமாய் ஆராய்ந்து பார்த்தீர்களானால் ஒழுங்குப்படிக்கு அது நமக்கு ... ... ... க்க, வேண்டுமென்று தாங்கள் நியாயஞ் செய்வீர்களென்பதற்கு நாம் எள்ளளவேனுஞ் சந்தேகப்படவில்லை.

தாங்கள் நமக்கு எழுதின கடுதாசிகளில் நாம் மாத்திரம் ஸ்ரீ அரண்மனைக்கு உடன்படிக்கை எழுதிக் கொடுத்திருக்கிறோம். ... ... ... ... உத்தரவும் பெற்றுக் கொள்ளவில்லை யென்று சொல்லி வந்தீர்கள். சரிதான். அரண்மனையாருக்கு முந்த உடன்படிக்கை நாம் எழுதிக் கொடுக்க வேண்டியது. அப்பால் அவர்கள் நமக்கு எழுதிக் கொடுக்க வேண்டிய நியாயமாயிருக்கிறது.

இது இப்படி இருக்க, வையாபுரி மேஸ்திரி நமக்கு எழுதின கடுதாசியில் ... ... ... ஸ்ரீ அரண்மனையார் பின்னாகை நமக்கு கவுலாத யெழுதி யனுப்புகிறதாய் யெழுதின படியால், அதை நம்பி நாம் வேலையை துடங்கினோம். ஆனால் அரண்மனையார் கவுலாத கொடுக்கவில்லை. கொடாவிட்டாலும் அரண்மனையார் கொடுக்கிறோமென்று அரண்மனை உத்தியோகஸ்தர் மூலியமாய் நமக்குக் கடுதாசி யெழுதினதை நாம் நம்பி ஒப்புக் கொள்ள வேண்டியதாயில்லையா? ... ... ... ... இது சங்கதி தங்களுக்கு தெரிந்தபடியாய் வையாபுரி மேஸ்திரி நமக்கு யெழுதின

கடுதாசிக்கு நமக்கு சரியான நகல் தங்கள் பார்வைக்கு இத்துடன் மறுபடியும் உள்ளடக்கம் பண்ணி அனுப்பி யிருக்கிறோம்.

மேலும், நாங் கப்பலை முந்த பழுது பார்த்து வெளியே விட்ட பிறகு தண்ணீர் கொண்டதினுல் மறுபடியும் கரைக்குக் கொண்டு வந்து பின்பு வையாபுரி மேஸ்திரிக்கு கப்பலுக்கு அதிகமான பழுதிருக்கிறதென்று பழுது பார்க்கப்படுவதற்கு ரூ. ௲ சொச்சஞ் செல்லுமென்றும் அது அரண்மனையார் தானே கொடுக்க வேண்டுமென்றும் ஷியாருக்கு உடனே நாங் கடுதாசி யெழுதி தெரியப் படுத்தச் சொன்னதற்கு ஷியார் நமக்கெழுதி .........ல் ஸ்ரீ மகாராஜா சாயேபு அவர்கள் (நம்மை) சமூகத்தில் வரச் செய்து ஒன்று நாம் புறப்பட்டாலும், வேலை நிறுத்தாமல் நடக்கும்படியாய் உத்தரவானதாயும் யெழுதினுர். இந்தக் கடுதாசியை வரப் பத்திக் கொண்டவுடன் அப்பாவு பிள்ளை என்பவரிடத்திலிருந்து நமக்கு வந்த கடுதாசியில் ஸ்ரீ மகாராஜா சாயேபு அவர்கள் நம்மை அழைப்பிக்கும்படி உத்தரவானதா யெழுதி இந்த யிவர்களுட இரண்டு கடுதாசிகளுக்குஞ் சரியான நகல் பண்ணி இத்துடன் மறுபடியும் உள்ளடக்கம் பண்ணி அனுப்பி யிருக்கிறோம். ஷியார்களுடைய கடுதாசிகள் நமக்குப் போதுமான தஸ்தாவேஜியல்லவோ, நியாய தலத்தில் இதுகள் யேத்துக் கொள்ளப்படத் தக்கதல்ல வென்று நியாயக்காரர் சொல்லுவார்களா?

ஸ்ரீ மகராஜா சாயேபு அவர்கள் நாம் வரும்படி உத்தரவனுப்பினவுடனே வேலைகள் சறுவ சாக்கிரதையாய் நடக்கும்படி திட்டஞ் செய்துபோட ......... உடனே புறப்பட்டுவந்து ஸ்ரீ மகராஜா சாயேபு அவர்கள் பேட்டியும் முந்தின விசை கண்டு மறுநாள் நாம் வந்த காரியத்தைக் குறித்துப் பேசயிருக்கையில் ஸ்ரீ மகராஜா சாயேபு அவர்களுக்கு சாவகாசமில்லாமல் வேறே முக்கியமான காரியமிருக்கிறதாயும், நாம் மறுபடியுஞ் சாலவிநாயக்கன் பட்டணத்துக்கு திரும்பிபோய் கப்பல் வேலை கூடியசீக்கிரத்தில் முடியும்படியாய் சாக்கிரதை செய்கிற......... இருபது நாளைக்குள்ளாக கவுலாத்தும், பணமும் அனுப்பிவிக்கிறதாய் ஸ்ரீ மகராஜா சாயேபு அவர்கள் சொன்னதாக வையாபுரி மேஸ்திரி சொன்னுர். அப்படி ......... அழைப்பிவித்து வர்த்தகாளிடத்தில் கடனுக பணங்களும் வாங்கி வேலை து ......... பாய் நடப்பிவித்துக்கொண்டு பணத்துக்காகவுங் கவுலாத்துக்காகவும் இரண்டுமாதங் காத்திருந்தும் வராமலிருந்த பொழுது யிந்த இரண்டு மாதத்திற்கு மத்தியில் கவுலாத்து அனுப்பும்படியாய் ஸ்ரீ மகராஜா சாயேபு அவர்களுக்குத் தெரியப்படுத்தும்படி வையாபுரி மேஸ்திரிக்குக் காகிதமெழுதி யனுப்பியுங் கடிதம் வராமலிருந்தது. இப்படியிருக்கும் பொழுது நாங் கப்பல் வேலையை கண்காணிக்கும்படியாய் தண்ணீரில் நிற்க அடிக்கடி உபாத்தியப்பட்டதில் நமக்கு திரேக அசவுகரியமுண்டானதினுல் சவுக்கியத்துக்காக துளசாபட்டணம் போக தீர்மானித்துக்கொண்டு நாம் ஊரை விட்டுப் புறப்படுகிறதற்கு முதல் நாளாகிய ௬ ஆ௱௬௪-வூ மார்ச்சு-மீ ௨௳

ஸ்ரீ மகராஜா சாயேபு அவர்களுக்கு தெரியப்படுத்தும்படியாய் வையாபுரி மேஸ்த்திரிக்குக் காயிதமெழுதி, அந்தக் காகிதத்துக்குள் சென்னைபட்டணம் யேசன்று துரை நமக்கு அனுப்பிவித்த கடுதாசியையும் அடக்கம்பண்ணி அனுப்பிப்போட்டு பின்பு கப்பல் வேலை நடக்கிறதற்கு குலாப்க்கான், சுப்பர்கார்கோ, மத்த காரியக் காறரையும் நியமித்து வேலை ஜரூராய் நடக்கும்படியாய் உத்தரவு கொடுத்து புறப்பட்டோம். காரியங்கள் இவ்விதமாய் இருக்கும்பொழுது நாம் யாதொரு சேதியும் ஸ்ரீ அரண்மனையாருக்குத் தெரியப்படுத்தவில்லை யென்று சொல்லுகிறது நியாயக்காரர்களால் அங்கீகரிக்கப்படுமா.

௲௮௱௩௰௯-௵ செப்றெம்பர்-மீ வரைக்கும் நாங் கவுலாத்துக்காக காத்திருந்தும் வராமல்போனதினாலே கப்பல் வேலையை நிறுத்தி அடுத்த நவம்பர்-மீ ரிசிடெண்டு கப்ட்டன் கலீசு துரையிடத்தில் வந்து அவரைக் கொண்டு ஸ்ரீ மகராஜா சாயேபு அவர்களிடத்திலிருந்து கவுலாத்து அழைப்பி வித்துக் கொடுக்கும்படியாய்க் கேட்டுக்கொண்டோம். அவர்கள் அப்படியே ஸ்ரீ மகராஜா சாயேபு அவர்களுக்கு எழுதியனுப்பினார்கள். அதற்கு ஸ்ரீ மகராஜா சாயேபு அவர்கள் உடனே பதில் பிரதியுத்தார மெழுதி நமக்குச் சொன்ன தென்னவென்றால் கப்பலை ஒப்புக்கொண்ட துரை கப்பல் விஷயத்தில் மிகுந்த சிறுமத்தை அடைந்தார்களென்பதை தாங்களறிந்திருக்கிறதாயும் நாளையா தினம் நம்முட கேட்டுக்கொள்ளுதலின்படியே கவுலாத மாத்திரமல்ல பணமும், அனுப்புகிறதா யெழுதியனுப்பினார்கள். அனுப்பப்பட்ட இந்தக் கடுதாசியை கப்ட்டன் டக்லீசு துரை நமக்குக் கா......... (நாம் மறுநாள்) ......... துரையவர் களுக்கு அன்று தினத்தில் ஸ்ரீ மகராஜா சாயேபு அவர்களிடத்திலிருந்து வந்த கடுதாசியில் ஸ்ரீ மகராஜா சாயேபு அவர்கள் நாம் அந்த கப்பலை விட்டுவிடவும். உடன்படிக்கையை தள்ளிப்போடவுங் கப்பல் தளவாடங்களை நாமே யெடுத்துக் கொள்ளவுங் கப்பலை வேலை துவங்கினது முதல் யிதுவரையில் அது விஷயத்தில் சிலவிட்ட சிலவை கணக்கிட்டு இவ்வளவுயென்று தொகை சொன்னால் அதை கொடுத்துவிடுகிறோமென்று நம்மை கேட்டுக்கொள்ளுகிறதாய் ஷெ காப்ட்டன் டக்லீசு துரை நமக்கறிவித்தார். ஆனால் யிந்த கப்பலை நாம் ஒப்புக்கொண்ட யிந்த பதினேழுமாதக் காலத்தில் நமக்கு யாதொரு குதாவடைகள் நேரிடாமல் தீவுக்கு சபர் போயிருக்குமாகில் மூன்றுநாலு விசைக்கதிகமாய் ஓட்டியிருக்கலாம். ஒவ்வொரு சபரில் சில லெட்ச ரூபாய்கள் சம்பாதித்திருக்கலாம் என்கிறதைக் குறித்து நாம் விசனப்பட்டாலும் ஸ்ரீ மகராஜா சாயேபு அவர்களுட விருப்பப்படி செய்வோமென்று தீர்மானித்து கப்ட்டன் கலீசு துரைக்கு இப்படி யாகட்டு மென்று சம்மதித்துக் கப்பல் கப்பித்தான், சிராங்கு, மத்த காரியஸ்த்தர் யாவரையுந் தள்ளிப்போட்டு வேலையையும் நிறுத்தி நம்முட கார்க்கானாவையு மெடுத்துப்போட்டு, நம்முட ஜாமான் தளவாடங்கள் வைத்திருந்த கொட்டடியை அதுகளோடே பூட்டி முத்திரை வைத்து, நின்ற சிலவு கணக்குப் பார்த்ததிலான

துகை ரூ. செதூசெ அணா கச, செப்புத்தகடு வித்ததில் கூடுதலான ரூ. சாகூங அணா கூ தள்ளி பாக்கி ரூ. செதூறாஉசெ அணா ருக்கு கணக்குக் கொடுத்தோம். இது சங்கதிகள் யாவற்றுக்கும் போதுமான தஸ்தாவேஜிகளும் நடந்த காரியங்களும் வெளியரங்கமா யிருக்கக் கொள்ள, நமது இஷ்டப் பிரகாரங் கணக்கு சோதித்து அனுப்பினதாகச் சொல்லுகிறது நியாயமாயிருக்குமா? நாம் இப்படி செய்கிறதற்கு நம்மை ஒரு சின்ன மனிதராகத் தங்கள் புத்தியில் நினைக்கிறீர்களா? நம்மைக் குறித்து இப்படி சொல்லுகிறது, தங்களுக்கு ரொம்பவும் தூரமாயிருக்கட்டும். இது நமக்கு அளவற்ற விசனத்தை உண்டாக்கிற்றென்று துக்கத்தோடு சொல்லுகிறோம்.

மேலும் தாங்கள் ஆக்ட்டிங் ரிசிடென்று மெஸ்த்தர் பேலி துரையவர்களுக்கு யெழுதின கடுதாசியில் தூஅாகூஅ ஷு செனவரிமீ சப்பலைப் பார்க்கிறது. இத்தனைக்கு அதிக பழுதில்லையென்று சொல்லி அப்பால் அதிக பழுதாயிருக்கிறதென்று சொன்னதாயு மெழுதினீர்கள். நாங்கப்பலில் யாதொன்றையும் பிடுங்கி பாராமல் அந்த உருவு யிருந்தபடியே மாத்திரம் பார்வையிட்டு சொன்னதொழிய மற்றபடி ... ... ... யென்றால் மந்த கப்பலின் உள்ப் புறத்தில் அடைத்திருக்கிற பூதாரிப் பலகைகள் ஒரு சாண் இடை வழி விட்டு பலகை தைத்திருக்கும். ஆனால் யிதுவோ யேகத்துக்கும் ஒரே அடைப்பாய் பூதாரிப் பலகைப் போட்டிருந்தபடியினாலேயே பலகையை எடுத்துப் பார்த்தாலொழிய சரியாய் சொல்லக் கூடாது; அப்படியும் நாம் அங்கங்கே பூதாரிப் பலகைகளை உடைத்துப் பார்த்திருப்போம். அவ்விடத்திலிருந்து அந்த கப்பலை செய்தவர்களும், அதைப் பார்த்தவர்களுமான மனிதர் அது அத்தனைக்கு பழசு அல்லவென்று சொன்னதினாலும் நாமும் அதை உடைத்துப் பார்க்கிறது அத்தனை அவசரமில்லையென்று யெண்ணி அப்படிக்குச் சொன்னோம். பழுது பார்க்க வேண்டியதுகளாயிருந்ததுகளை பழுது பார்த்து நாங் கப்பலை தண்ணீரில் விட்டபோது கப்பல் தண்ணீர் கொண்டது. அப்பொழுது தான் அது முத்திலும் பழுதென்று அறிந்து அந்தப் பழுதைப் பரிசோதிக்கும்படியாய் வெளியே கொண்டு வந்து பூதாரிப் பலகைகளை உடைத்துப் பார்க்கும் பொழுது, பலகைகளும், பங்கு கால்களும் மக்கியும், மடித்தும் போயிருந்தது. என்னத்தினாலென்றால் கப்பல் வெளியே யிருந்த காலத்தில், கொட்டாகை மேலே போட்டு பதனப்படுத்தாமல் மழையிலுங் கிடந்தபடியினாலேயே மேலே யிருக்கிற சூரல் வழியாய் மழையினால் தண்ணீர் கொண்டு பலகைகளும் பங்கு கால்களும் மடித்ததென்று அறிந்தேன். அப்பொழுதே அரண்மனையார் — மாதிரி பார்க்கும்படிக்கு சிலதை அனுப்பிவித்தேன். இது மிகுந்த பழுதாயிருக்கிறதை அறிந்து முழுதுஞ் செவ்வைப் படுத்தாமல் விட்டு விட்டால் ஸ்ரீ அரண்மனையாருக்கு நாம் பத்தா கூலிக்கு வருஷம் 1க்கு ஒப்புக் கொண்ட ரூ. சூதூ படிக்கு அது வரையில் சென்ற பதினேழு மாதத்துக்கு மாத்திரமல்ல, நாம் உடன்படிக்கையில் ஒப்புக் கொண்ட யேழு

வருஷத்துக்குங் கணக்காலுள்ள அநேகமாயிர ரூபாய்கள் கொடுக்க பாத்தியப் பட வேண்டுமே. இதற்காகவே நாம் அதை வேலை செய்யாமல் விட்டு விடாமல் உடனே காரியமிப்படி யிருக்கிறதென்று தெரியப்படுத்தினோம். மேலும் உடன் படிக்கையில் ரூ. ௲௨ாக்கு மேல்ப்பட செல்லுகிற துகை அரண்மனையார்தானே செய்து கொடுக்கிறதென்று கண்டிருக்க அப்படிக்கும் நாம் அரண்மனையாரைக் கேளாமல் அதை நாம் ஒப்புக் கொண்டபடியால் அதுகளை சீக்கிரம் பழுது பார்த்து கப்பல் ஓடச் செய்கிறது நமது பொறுப்பென்றும், அது ஓடவில்லை யென்றால் அரண்மனையாருக்கல்ல நமக்கு பெரிய நஷ்டமென்று நாம் அறிந்த படியால் ஒரு வேளை பணங் கொடுக்கிறதற்கு ஸ்ரீ அரண்மனையார் யோசித்தால் ......... செய்து அப்பால் ஞாயப்படி பேசிக்கொள்ளலாமென்று தீர்மானித்து அரண்மனையாரைப் பணமல்ல, கவுலாத்துக்காக மாத்திரங் கேட்டு துடருமிடத்து அரண்மனையார்தானே கவுலாத்தும் அத்துடனே பணமுங் கொடுக்கிறதாய்ச் சொன்னார்கள். அப்பொழுது அரண்மனையார் நியாயஸ்தலத்தாரானபடியால் .........வேண்டியது தங்கள் கடமையென்று நினைத்து உடன்படிக்கைப்படி போகி ......களென்று அறிந்து கவுலாத்துக்காகவும், பணத்துக்காகவும் காத்திருக்கும் பொழுது, கவுலாத்தும் அத்துடன் பணமுங் கொடுக்கிறோமென்று சொன்ன ஸ்ரீ அரண்மனையார் ......... அப்பால் பத்தாக்கூலிக்குவிட மனதில்லையென்றும் அதற்காக செ......ற சிலவுகளையும் அதின் தடவாடங்களையும் கொடுத்துவிடுகிற தென்றுஞ் சொன்னார்......... நாம் ஒருவிசை பத்தாகூலிக்கு யேழு வருஷத்துக் கென்று ஒப்புக்கொண்ட ........... ததியில் அரண்மனையார் மனதுபிரகாறம் விடுகிறதற்கு நமக்கு ஒருபோதும் ஞாய........... திருந்தும் அரண்மனையார் மனதுப்படி போகிறது நன்மையென்று நாம் நல......கையால் நினைத்து அவர்கள் மனதுப்படி செய்யச் சம்மதித்தும் நாம் அதற்க......ட்ட சரீரபிறையாசங்கள் யாவற்றும் அரண்மனையார் நிமித்தம் வீணாய்......யிருக்க நாம் நமது சொந்தத் திலுங் கடன் வாங்கியுஞ் சிலவிட்ட சிலவு பண......... அரண்மனையார் சரிவரக் கொடாமலிருப்பது மிகுந்த அநியாயமென்கிற......... அரண்மனையாருக்கும் மற்ற ஞாயக்காரருக்குந் தெரியாததல்ல.

மேலும் நாங்கப்ப........... விட்ட சிலவு ரூ. ௭௲ சொச்சமென்று கணக்கிட.........ப்பலில்தானே சிலவின வகை தாங்களெண்ணிக்கொண்டதாய் தங்களுட.........லத்தெரிய வருகிறது......... பல்ல நாம் இந்த கப்ப.........ஒப்புக் கொள்ள.........ம்பி ..............சிராங்கு மற்றுங் கப்பல் வேலைக்க...... இதன்றிக் கப்பல் வேலை.........தற்கு வைக்கப்பட்டிருந்த ரையிட்டர், கணக்கப்பிள்ளை, வேலையாள்க்கள், மாடு வண்டிக்காறர் படிச்சிலவு நம்முட குருதை சவாரி, பல்லக்கு சவாரி ஒவ்வொரு சிலவையும் கணக்கிட்டு யேகத்துகை போட்டிருக் கிறதை அறி...... இவ்வளவு நியாயமாய் சென்றது யென்கிறதை நம்புகிறதில் தாங்கள் அனுப......... யிராமலிருக்கிறதல்ல. உடன்படிக்கைக்கு விரோதமாய்

கப்பலை நீங்கள் யெடு........... கொள்ளும்போது இந்தச் சிலவுகளெல்லாம் நீங்கள் கொடுக்கவேண்டியிருக்க......... அநியாயமென்று சொல்லலாமா இந்த சிலவுகளுக்கெல்லாம் விபரமான கணக்குக் கொடுத்திருக்கிறோம்.

மேலும் செப்புத்தகடுகளை நாம் ரூ. ௬௯௰௫க்கு வித்து யெடுத்துக் கொண்டதாயும் அந்தத் தகடுகளும் ஈயக்குண்டுகள், மற்ற சாமான்களும் ரூ. ௫௲ பொறுமானதுகளாய் தங்கள் காரியஸ்த்தன் சொல்லுகிறதா யெழுதினீர்கள். நல்லது அந்த செப்புத்தகடுகள் புதிதாய் செய்யப்பட்டபொழுது இவ்வளவு துகை பெறுமானதாயிருந்ததென்று வைத்துக்கொள்ளுவோம். ஆனால் ஷை கப்பல் செய்து, பழசாய்போனபோது அந்த செப்புத்தகடுகள் செய்த பண துகைக்கு சரியாயிருக்குமா. அதுகளை நாம் வித்து எடுத்துக்கொண்டதாய் சொல்லுகிறதை ஒப்புக்கொள்ளப்படத் தக்கதல்ல ரூ. ௨௲ பெருமான செப்புத் தகடு பலமுள்ளதாய் செய்யப்படுகிறதற்கு அது அச்சாரங் கொடுக்கப்பட்டிருக் கிறதே தவிர வேறல்ல. இந்தப் பணத்தைக் கேட்குமிடத்தில் அவன் ஒப்பந்தப் படிக்கு ஒப்புக்கொண்டாலொழிய அச்சாரங் கொடுத்தது கொடுக்கமுடியா தென்று வியாட்சியஞ் செய்கிறான். இது நமக்கு யெவ்வளவு பெரிய நஷ்டம். கணக்கில் தாக்கல் பண்ணால் தள்ளவேண்டியிருக்க அதையும் ஒப்புக்கொண் டோம். ஈயக்குண்டுகளும் இப்படி மலவாதியிடத்து வைக்க...... இ ......... கூடு செய்ய அச்சாரங் கொடுத்திருக்கிறது.

சாலவநாயக்கன் பட்டணம் காரியஸ்தர் நாங் கப்பல் விஷயத்தில் மெய்க்காடு கூலிக்கு சிலவிட்டது ரூ. ௫௱ சொச்சமென்று சொல்லுகிறதாய் யெழுதினீர்கள். மகடூல் இராமசாமி, கார்பாரி முன்னுக்கு அவர் பார்வையிட்டு தானே கோழிவெட்டுக்காறருக்கு மாத்திரம் ரூ. ௫௱ சிலவானங் கொடுத்திருக்க இப்பொழுதெழுதின காரியஸ்தன் சொன்னது எத்தனை பெரிய பிறட்டுயென்றும் மேலும் யிந்த ஒரு காரியத்துக்கு இவ்வளவு கொடுத்தது நிசமானால் மத்த தொழிலாளிகளுடைய கூலிகளெவ்வளவென்று பார்த்துக்கொள்ளுங்கள் அன்றி யும் பலகை முதலான சாமான்கள் செய்கிறதற்கு அச்சாரங் கொடுத்தது மாத்திரம் யேறக்குறைய ரூ. ௲ சிலவானமாகி யிருக்கிறதற்கு கணக்கினாலும் வேலை ஒப்புக்கொண்ட தொழிலாளிகளொவ்வொருத்தராலும் போதுமானபடி ரூபகாரிப்படுத்துவோம்.

மேலும் ஸ்ரீ அரண்மனையார் நமக்கு கப்பல் வேலை செய்கிற தளவாடங் களும் ஜாமான்களும் வைத்துக்கொள்ளும்படிக்குக் கொடுத்த கொட்டடியில் ஷை கப்பல் ஜாமான்கள் மாத்திரம் வைத்ததல்ல நம்முடையவுங், கப்பல் கப்பித்தானுடையவும் பொருள்களாகிய ரூ. ௫௲ சிலவானம் பெறத்தக்க (சாமான்)கள் அந்த அறையிலே வைக்கப்பட்டிருந்தபடியால் நாம் அதைப் பூட்டி முத்திரை வைத்தோம். அதிலிருந்த கப்பல் ஜாமான்கள் தவிர

சாட்டுடிருபின் இராணுமிட்டா என்னப்பட்டக் கப்பல் கெடியாரம் இன்னமுஞ் சாஸ்த்திரப் பொஸ்த்தகங்களுமிருந்தது. பூட்டி முத்திரை வைத்திருந்ததாகிய அறையை உடைத்திருக்கிறதாயும் அதிலிருந்த ஜாமான்களெல்லாம் இல்லாமலிருக்கிறதாயும் சமாசாரம் வந்தது அநேகருக்கு........... நியாயஞ் செய்கிறவர்களுந் தருமமாய் இராட்சிய பரிபாலனம் செய்கிறவர்களுமான ஸ்ரீ அரண்மனையார் நாம் முத்திரைபோட்டு பூட்டிவைத்த கொட்டடியை நமது அனுமதியுஞ் சம்மதமுமில்லாமல் திறக்கிறதற்கும் நம்முட பொருள்களை யெடுத்துக்கொள்ளுகிறதற்கு ........... அவநியாயத்தைப் பார்க்கிலும் இது எத்தனை பெரிய அவநியாயம். மற்ற அவநியாயங்களிருக்கட்டும். இந்தக் காரியமொன்றை மாத்திரம் பேசுகிறதானால் பிறிட்டிஸ்லாவில் நமக்கு நீதி கிடைக்கமாட்டாதோ, காரியங்கள் இவ்விதமாயிருக்க யிதுகளையெல்லாம் நாம் நம்முட இங்கிலீசு பாஷையில் தங்களுக்குச் சரியா யெழுதியிருக்க நமது சரியான அபிப்பிராயத்தைத் தங்களுக்கு மனுஷாள் தங்களுக்குத் தெரியப்படுத்தவில்லை யென்கிறதைத் தாங்கள் நாம் இரட்டித்து எழுதினோமென்று சொன்னதினாலறிந்து தமிழ் அறிந்த ஒருவரைக் கொண்டே யிந்தக் கடிதமெழுதுகிற மிகுந்த வருத்தத்துக்குள்ளானோம். ஆகையால் தாங்கள் மற்ற மனிதருடைய கேள்விகளை வாங்காமல் இனிமேல் யி...... சிறித்து நாம் யாதொரு வருத்தத்தையும் அடையாமலும் நியாயம் பெற்றுக்கொள்ளுகிறதற்காக இனி நாம் உழைக்காமலுமிருக்கிறதற்காக தாங்கள் தயவுசெய்து யிது காரியங்கள் யாவற்றையும் சீர்தூக்கிப்பார்த்துத் தாங்கள் அரண்மனையை ........ டுத்தும்படியாய் ........... கிறபடியால் த......... பேர் பிரஸ்தாபங்.........த்தியாய் எல்லா... ...டுப்படிக்கும் இனி யிந்தக் காரியத்தைக் குறித்து நாம் நியாய முதலானதுகளுக்குப் போகிறதினால் நமக்குண்டாயிருக்குஞ் சிறுமத்தையும் வெகுவாக்கும்படிக்குத் தங்களை அநேக வந்தனங்களோடே கேட்டுக்கொள்ளுகிறோம்.

I am

Sir

Your most obedient Servant,

**James Rop.**

Bavajee Ramajee Pandit,

Sirkell of His Highness the Rajah of Tanjore.

(வளரும்).

| श्लोक-संख्या | | अधिकरण-संख्या |
|---|---|---|
| ६७ | तन्त्रौ सहेत्युभयगं सर्वाङ्गं द्रव्यसंस्कृतिः । | १६ |
| | यूपबर्हिर्धर्महीनं पवित्रार्थमपीदृशम् ॥ | १८ |
| ६८ | शकलः सवनीये स्यात् उपांशुत्वन्तु मुख्यगम् । | २० |
| | श्येनाङ्गे नवनीतं स्यात् तदङ्गेषु समेषु तत् ॥ | २२ |
| ६९ | तरसास्सवनीयानां पुरोडाशा भवन्ति हि । | २३ |

इति तृतीये अष्टमः

अधिकरणसंख्या- १५, २०, २०, २३, २१, १७, २३, २३.

योगः – १६२. सर्वसंख्यैक्यम् – २५९.

इति तृतीयाध्यायः

---

## अथ चतुर्थस्याध्यायस्य प्रथमः पादः

| | | |
|---|---|---|
| | अथ प्रयुक्तयै क्रत्वर्थपुरुषार्थविचारणा ॥ | १ |
| ७० | क्रतूपकारात्क्रत्वर्थं पुंप्रीत्या तु पुमर्थता । | ३ |
| | न विधेयं फलं गोदोहने क्रत्वर्थता न हि ॥ | ५ |
| ७१ | द्रव्यार्जनञ्चापि तथा नेक्षेतेत्याद्यपीदृशम् । | ७ |
| | यज्ञायुधे हविष्टं न पश्वेकत्वं क्रतोर्गुणः ॥ | ९ |
| ७२ | विवक्ष्यं स्यात्तथा लिङ्गं दृष्टादृष्टार्थमाश्रयि । | ११ |
| | साक्षात्प्रयुक्तिश्चिन्त्याथो आमिक्षैव प्रयोजिका ॥ | १३ |
| ७३ | नयनस्य परार्थत्वात्पदकर्माप्रयोजकम् । | १४ |
| | पुरोडाशकपालस्य नोपवापप्रयुक्तता ॥ | १५ |
| ७४ | पशौ शकृल्लोहितं पुरोडाशे स्विष्टकृच्च न । | १७ |
| | नापि प्रयाजशेषस्याभिघारः स्यात्प्रयोजकः ॥ | १८ |
| ७५ | समानीतिस्त्वाज्यधर्मे जुह्वाद्याज्यं व्यवस्थितम् । | २० |
| | अष्टावुपभृतीत्येतद्द्विचतुष्ट्वात्मकं भवेत् ॥ | २१ |

इति चतुर्थे प्रथमः

श्लोक-संख्या | अधिकरण-संख्या

## अथ चतुर्थस्याध्यायस्य द्वितीयः पादः

७६ स्वरुर्यूपानुनिष्पन्नः शाखा "प्राची" मितीरिता । २
च्छेदप्रयोक्त्री शाखा, तत्प्रहारे प्रतिपत्तिता ॥ ४

७७ तथा निनयनञ्चापां दण्डदानन्तु नेदृशम् । ६
प्रासनं प्रतिपत्तिः स्यात् तथावभृथयानगीः ॥ ८

७८ नियमः कर्तृदेशादौ तथा द्रव्यगुणेष्वपि । १०
तत्प्राधान्याच्च संस्कारे द्रव्यत्यागे तु यागवाक् ॥ १२

७९ स प्रक्षेपाधिको होमः दानमन्यस्वताकृतिः । १४
वार्तिके, द्रव्यदेवानुमितयागविधिर्मतः ॥ १५

८० यागे जुहोतिश्रवणं युक्तश्चेति नयद्वयम् । १६
यद्बर्हिरातिथ्येष्टयर्थं साधारणमिदं स्मृतम् ॥ १७

इति चतुर्थे द्वितीयः

## अथ चतुर्थस्याध्यायस्य तृतीयः पादः

८१ फलश्रुतिस्त्वर्थवादो द्रव्यसंस्कारकर्मसु । १
नैमित्तिकं न नित्ये स्यात् दध्नस्तूभयशेषता ॥ ३

८२ पयोव्रतन्तु क्रत्वर्थं कल्प्यं विश्वजितः फलम् । ५
एकमेव तु तत्, स्वर्ग एवासौ सर्वसाम्यतः ॥ ७

८३ रात्रिसत्रे फलं वादात् काम्ये स्वर्गो न कल्प्यते । ९
फलं सर्वेभ्य इत्युक्तं पृथक्पृथगनुष्ठितिः ॥ ११

८४ ऐहिकामुष्मिकं चित्रायागादीनां फलं स्मृतम् । १२
सौत्रामणीचितेरङ्गं पौर्णमास्याश्च वैमृधः ॥ १४

८५ आग्निमारुतकादूर्ध्वमनुयाजेति कालवाक् । १५
इष्टेः पश्चात्सोमयागः पुत्रे वैश्वानरीफलम् ॥ १७

| श्लोक-संख्या | | अधिकरण-संख्या |
|---|---|---|
| ८६ | प्राग्जातकर्मणो नेयं नाप्याशौचे भवेदियम् । | १९ |
| | न वाजपेयकाले स्याद्बृहस्पतिसवक्रिया ॥ | २० |

इति चतुर्थे तृतीयः

## अथ चतुर्थस्याध्यायस्य चतुर्थः पादः

| | | |
|---|---|---|
| ८७ | यागा मुख्या राजसूये सर्वाङ्गं देवनादिकम् । | २ |
| | नोपसच्छेषता सौम्ये सांग्रहण्यङ्गताऽऽमने ॥ | ४ |
| ८८ | दधिग्रहस्तु नित्यः स्यात् न तु वैश्वानरस्तथा । | ६ |
| | तथा षष्ठीचितिः पिण्डपितृयज्ञे पुमर्थता ॥ | ८ |
| ८९ | रशना न पशोरङ्गं स्वरोस्तु स्यात्तदङ्गता । | १० |
| | षड्यागानां मुख्यतेष्टौ सोम एव हि मुख्यता ॥ | १२ |

इति चतुर्थे चतुर्थः

अधिकरणसंख्या – २१, १७, २०, १२. योगः – ७० सर्वसंख्यैक्यम् – ३२९.

इति चतुर्थाध्यायः

## अथ पञ्चमस्याध्यायस्य प्रथमः पादः

| | | |
|---|---|---|
| ९० | श्रुतिलक्षण एव स्यादर्थानां नियतः क्रमः । | १ |
| | विशेषणतयार्थानां क्रमश्च विधिमर्हति ॥ | २ |
| ९१ | क्त्वाश्रुत्या दीक्षयित्वेति क्रमश्चैव विधीयते । | ३ |
| | अर्थाच्च पूर्वं पाकः स्यात् नियमो नानुमन्त्रणे ॥ | ५ |
| ९२ | समिदादौ क्रमः पाठात् प्रवृत्त्या च भवेत्क्वचित् । | ७ |
| | ऋगागमे क्रमः स्थानात् साद्यस्क्रेऽपि तथेष्यते ॥ | ९ |
| ९३ | दैक्षः पूर्वोऽनुबंध्यात्स्यात् क्वचिन्मुख्यक्रमात्क्रमः । | ११ |
| | बली मुख्यक्रमात्पाठः स च मन्त्राश्रितो बली ॥ | १३ |

श्लोक-संख्या — अधिकरण-संख्या

९४ आज्यात्पूर्वं चरोर्धर्माः श्रौतं सद्यस्त्वमिष्टिषु । १५
स्यातामुत्कर्षापकर्षौ तदादिमतदन्तयोः ॥ १६

९५ प्रवृत्त्या प्रागिष्टिधर्माः यूपमात्रापकर्षणम् । १८
प्रासङ्गिकञ्च नोत्कर्षेद्वेदिमात्रापकर्षणम् ॥ २०

९६ उत्कर्षो नाग्निहोत्रस्योत्कृष्यते षोडशी पुनः । २२

इति पञ्चमे प्रथमः

——o——

## अथ पञ्चमस्याध्यायस्य द्वितीयः पादः

स्यात्पदार्थानुसमयः प्राजापत्यपशुव्रजे ॥ १

९७ अश्वप्रतिग्रहेष्टौ तु काण्डानुसमयो भवेत् । २
तथा मुष्टिकपालादौ प्रदानान्तस्त्ववद्यतिः ॥ ४

९८ अञ्जनाद्यापरिव्याणं, प्राजापत्यपशुव्रजे । ५
दैवताद्यवदानेषु पदार्थोऽनुसमीयते ॥ ६

९९ नानाबीजोलूखलैक्यं पात्रभेदः पृषद्घृते । ८
नारिष्ठात्प्राङ्नोपहोमः अभिषेकापकर्षणे ॥ ९

१०० देवनाद्यपकर्षः स्यात् सावित्रादेः पुरः क्रिया । ११
स्याद्रुक्मप्रतिमोकादि पश्चाद्दीक्षितसंस्कृतेः ॥ १२

इति पञ्चमे द्वितीयः

——o——

## अथ पञ्चमस्याध्यायस्य तृतीयः पादः

१०१ प्रयाजैकादशत्वादि सर्वं संपाद्यमिष्यते । १
स्वस्थानवृद्धया षट्त्वं स्यात् आगन्तोस्त्वन्तवेशनम् ॥ ३

१०२ सोमवृद्धावपि तथा गायत्रे साम्न आगमः । ५
ग्रहेष्टकं क्रत्वगन्यङ्गं * चित्रिण्याद्यास्तु नान्ततः ॥ ७

* इत आरभ्य मातृकागता एव श्लोका लिख्यन्ते, इयदवधि तु स्वकल्पिताः श्लोकाः विलिखिताः । (सं)

| श्लोक-संख्या | | अधिकरण-संख्या |
|---|---|---|
| १०३ | लोकंपृणा तदन्ते वाग्निहोत्रादीष्टितः परम् । | ९ |
| | क्रत्वन्ते त्वग्निचिद्धर्मा इष्ट्यन्ते दीक्षितस्य ते ॥ | ११ |
| १०४ | पाठक्रमः क्रतूनां नाग्निष्टोमविकृतिः परा । | १३ |
| | सा च सर्वा न संस्थैव नैकस्तोमग्रहोऽत्र च ॥ | १५ |

इति पञ्चमे तृतीयः

---

## अथ पञ्चमस्याध्यायस्य चतुर्थः पादः

| | | |
|---|---|---|
| १०५ | श्रुत्यर्थाभ्यां पाठबाधः प्रवृत्तेर्मुख्यतस्तथा । | २ |
| | विकल्पः सोमपूर्वत्वे सोऽपि वर्णत्रयस्य च ॥ | ४ |
| १०६ | सोमेऽप्यूत्वादिबाधः स्यान्नाज्योत्कर्षश्च सोमतः । | ६ |
| | सद्यस्काला च विकृतिः सोमोर्ध्वं दोहवैकृतम् ॥ | ८ |
| १०७ | दर्शोर्ध्वा सोमविकृतिः, | ९ |

इति पञ्चमे चतुर्थः

अधिकरणसंख्या – २२, १२, १५, ९; योगः — ५८.

सर्वसंख्यैक्यम् — *(३८७) ४१३.

इति पञ्चमाध्यायः

---

## अथ षष्ठस्याध्यायस्य प्रथमः पादः

| | | |
|---|---|---|
| | स्वर्गः साध्यो न साधनम् । | १ |
| | तिर्यगादेर्नाधिकारः स्यात्स्त्रिया अप्यधिक्रिया ॥ | ३ |
| १०८ | दंपत्योश्च सहैवासौ नाधाने पुंद्वयस्य सा । | ५ |
| | यावदुक्ते स्त्रियास्सेयमपशूद्रश्च सा मता ॥ | ७ |

---

* वस्तुतः सर्वसंख्यैक्यं-३८७ इत्येव पर्यवसन्नम् । मातृकायां तु ४१३इति दृश्यते । तत्र कारणं चिन्त्यम् । इतः परमस्माभिः पारमार्थिकी संख्या धनुश्चिह्नस्यान्तः निर्दिश्यते इति ज्ञेयम् ।

श्लोक-संख्या | अधिकरण-संख्या

१०९ प्रतीकारेऽद्रव्यवतोऽप्यङ्गाभाववतस्तथा । ९
*नाङ्गाभावाप्रतीकारे नित्ये साग्नेरधिक्रिया ॥ ११

११० त्र्यार्षेयवरणात्सा स्याद्रथकारस्य वाऽऽहितौ । १३
स्थपतेश्च निषादस्य, १४

इति षष्ठे प्रथमः

——०——

## अथ षष्ठस्याध्यायस्य द्वितीयः पादः

सत्रे प्रत्येकमेव तु ॥ १

१११ विवक्षिता कर्तृसंख्या प्रारब्धस्य समापनम् । ३
लौकिके नैव नियमः कलंजप्रतिषेधनम् ॥ ५

११२ नियमा उपनीत्यूर्ध्वं नाशक्तया कालहापनम् । ७
जीवने जीवने कर्म होमश्च प्रतिभेदनम् ॥ ९

११३ एवं गुर्वनुगत्यादौ सोमादेश्चास्ति नित्यता । ११

इति षष्ठे द्वितीयः

——०——

## अथ षष्ठस्याध्यायस्य तृतीयः पादः

अशक्त्या त्वङ्गहानं स्यात्काम्ये तु न तदिष्यते ॥ २

११४ कर्माभेदो द्रव्यभेदे द्रव्यादेः प्रतिनिध्ययः । ४
न देवतादेः स मतः प्रतिषिद्धस्य नापि सः ॥ ६

११५ स्वामिनो न प्रतिनिधिः सत्रे स च मृतस्य तु । ८
आनीतोऽसौ न च स्वामी फलिसंस्कारभाक्तु सः ॥ १०

११६ सदृगेव प्रतिनिधिः यवा न व्रीह्युपक्रमे । १२
पूतीकश्च प्रतिनिधिर्नासौ प्रतिनिधेर्मतः ॥ १४

* पूर्वग्रंथेषु इदमेकमेवाधिकरणं, अत्र तु द्वित्वं समाश्रितम् ।

| श्लोक-संख्या | | अधिकरण-संख्या |
|---|---|---|
| ११७ | पूतीकसदृगग्राह्यं नीवारे मुख्यमेव चेत् । | १६ |
| | संस्कारेषु कृतेष्वेवं प्रयोजनकृतौ न तु ॥ | १८ |
| ११८ | संस्कारायोग्यमुख्यं स्यान्नतु कार्याक्षमं तथा ॥ | २० |
| | शेषकार्याक्षमं मुख्यं, | २१ |

इति षष्ठे तृतीयः

——o——

## अथ षष्ठस्याध्यायस्य चतुर्थः पादः

| | | |
|---|---|---|
| | नाशेऽवत्तस्य चाज्यतः ॥ | १ |
| ११९ | एवं शेषावत्तनाशे सर्वे भक्षास्तथर्त्विजाम् । | ३ |
| | होमः किंचित्कृत्स्नभेदे सर्वक्षाणनिमित्तता ॥ | ५ |
| १२० | उभयार्त्यविवक्षा स्यात् होमाभिषवयोर्न सा । | ७ |
| | अग्निद्वित्वविवक्षा स्यात् हविरार्तौ क्रियाविधिः ॥ | ९ |
| १२१ | सा च क्रिया स्याद्दर्शाङ्गं स त्यागेन च विश्वजित् । | ११ |
| | वत्सकाले व्रतं च स्यात् असान्नाय्येऽप्ययं भवेत् ॥ | १३ |
| १२२ | प्रतिपाद्याहृतौ शाखा; | |

इति षष्ठे चतुर्थः

——o——

## अथ षष्ठस्याध्यायस्य पञ्चमः पादः

| | | |
|---|---|---|
| | (अ)भ्युदये च न कर्मभित् । | १ |
| | देवतापनयस्त्वाज्ये निर्वापश्चाविवक्षितः ॥ | ३ |
| १२३ | अविवक्षा तण्डुलानां तूष्णीमर्धनिरुप्तके । | ५ |
| | असान्नाय्येऽप्यीयमिष्टिरक्रीतेऽपि च विश्वजित् ॥ | ७ |
| १२४ | दीक्षाविकल्पः प्रकृतौ द्वादश द्वादशाहके । | ९ |
| | गव्यदीक्षा पुरा माघ्या दीक्षितोऽवभृथावधि ॥ | ११ |

छर्दिर्मर्दस्तथा दुर्दः कर्दश्चेत्यभिधीयते ।
अब्दश्शब्दश्च सुब्दश्च कुब्दो रोगविशेषके ॥ ६९ ॥

इति दकारप्रासाः ।

बुधो विधिर्विधुश्च स्याद्विधामधुसुधाव्यधाः ।
वधूर्वधः पृथुश्चेति कथापि स्यान्निधिस्तथा ॥ ७० ॥

आधिर्भोधिस्तथा गोधिर्गोधा राधा च राधवत् ।
साधुस्सिधुस्तथा बाधा गाधा मेधा च कथ्यते ॥ ७१ ॥

गाधः पाधस्तथा मेधी बन्धुरन्धुरितीर्यते ।
गन्धः स्कन्धश्च सन्धा च सिन्धुरन्धश्च कथ्यते ॥ ७२ ॥

श्राद्धमिद्धं च सिद्धश्च बुद्धिर्बुद्धं च कथ्यते ।
विद्धं वृद्धश्च शुद्धश्च वृद्धिर्वृद्धमितीरितम् ॥ ७३ ॥

मूर्धा वार्धिस्तथाप्यर्धं लुब्धोऽप्यब्धिः प्रधीयते ।

इति धकारप्रासाः ।

जनो जिनो घनश्च स्यादिनश्चापि धनं धनी ॥ ७४ ॥

जनी मनो धनुश्चापि मनो वन इतीर्यते ।
भानुस्सूनुश्च मीनश्च धाना जानीति कथ्यते ॥ ७५ ॥

यानं पानं तथा दानं स्नानं स्थानं च वानवत् ।
मानं सूनं च नूनं च छिन्नं सन्नं च भिन्नवत् ॥ ७६ ॥

अन्नं विन्नं तथा छन्नं भुग्नो भग्नः प्रकीर्तितः ।
अग्निर्नग्नस्तथा नग्नं विघ्नो निघ्नश्च कथ्यते ॥ ७७ ॥

द्युम्नं चिह्नं तथा ब्रध्नः ब्रध्ना चेत्यभिधीयते ।

इति नकारप्रासाः ॥

कपिर्वपुस्त्रपुश्चेति कूपश्चाथ तपस्तपा ।। ७८ ।।

कृपा प्रपा त्रपा चापि नृपे विप इतीर्यते ।
कोपो लोपश्च सूपश्च श्रीपो गोपश्च भूपवत् ।। ७९ ।।

कूपश्च टोपः कथितश्चापस्तापः प्रकीर्तितः ।
रूपं यूपं च दीपश्च द्वीपो धूप उदाहृतः ।। ८० ।।

कल्पस्तल्पं तथा शिल्पः स्वल्पश्चेत्यभिधीयते ।
दर्पस्सर्पश्च सर्पिश्च शूर्पः कूर्पमितीरितम् ।। ८१ ।।

पुष्पं बाष्पश्च बाष्पं च निष्पापा धान्यवाचके ।

इति पकारप्रासाः ।।

सिफा शफं च कथितं रेफश्शब्दरवर्णयोः ।। ८२ ।।

इति फकारप्रासाः ।।

स्तम्बो डिम्बोऽथ शम्बश्च कबिर्बिम्बश्च कथ्यते ।
रुम्बुः कम्बुस्तथा जम्बूशाबस्तूबः प्रकीर्तितः ।। ८३ ।।

इति बकारप्रासाः ।।

स्वभूः प्रभा सभा चाथ शुभं चापि नभो नभः ।
प्रभुर्विभुस्सभश्च स्याच्छंभुर्जम्भस्तु कुम्भवत् ।। ८४ ।।

डिम्भस्तम्भस्तु जृम्भश्च रम्भा कुम्भिः प्रगीयते ।
